Rediffusion/Edelman

**Publication:** Dinamani
**Date:** 25/08/2013
**Edition:** Coimbatore
**Page No.:** 2
**Headline:** Winners of TCS IT Wiz

# விநாடி – வினா: ஜி.கே.டி. பள்ளி முதலிடம்

**கோவை, ஆக. 24:** கோவையில் வெள்ளிக்கிழமை நடந்த டிசிஎஸ் ஐடி விஸ் விநாடி - வினா போட்டியில் கோவை ஜி.கே.டி. பள்ளி முதலிடம் பெற்றது.

சுகுணாபுரம் ஸ்ரீ கிருஷ்ணா கல்லூரியில் இப்போட்டி நடந்தது. கோவையில் நடந்த முதல் கட்ட எழுத்துத்தேர்வில் 20 கேள்விகள் கேட்கப்பட்டன. இதில் முதல் 6 இடங்களைப் பெற்றவர்கள், கோவை பிராந்திய இறுதிச் சுற்றுக்குத் தேர்வு செய்யப்பட்டனர். பிராந்திய இறுதிச் சுற்றில் ஜி.கே.டி. பள்ளியைச் சேர்ந்த நவீன் கிருஷ்ணன், ராகுல் ஆகியோர் முதலிடமும், கோத்தகிரி புனித ஜூட்ஸ் பப்ளிக் பள்ளியைச் சேர்ந்த அனுஷியா பிரபா, ஜியோன் பிலோமின் ஆண்டனி ஆகியோர் இரண்டாமிடமும் பெற்றனர். முதலிடம் பெற்றவர்களுக்கு தலா ஒரு ஐபேட், இரண்டாமிடம் பெற்றவர்களுக்குத் தலா ஒரு கேலக்ஸி டேப்லெட் பரிசாக வழங்கப்பட்டன. இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய 6 அணிகளுக்கும் பல்வேறு பொருள்கள் பரிசாக வழங்கப்பட்டன.